பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 08 2026** **SATURDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** சுகாதாரத்தை பேணி காப்பதில் பரிசோதனை மையங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

**2)** தமிழகத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவந்த **2** ஆயிரத்து **500** செவிலியர்கள் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.

**3)** வேட்டி - சேலை நெய்யும் நெசவாளர்களின் கூலியை உயர்த்தித்தருவது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

**4)** சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

சுகாதாரத்தை பேணி காப்பதில் பரிசோதனை மையங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில், ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு மற்றும் நவீன தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி சுகாதாரத்துறையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டு வரும் நிலையில், சரியான சிகிச்சை அளிப்பதற்கு இந்த பரிசோதனை மையங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவந்த **2** ஆயிரத்து **500** செவிலியர்கள் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் இன்று, **Double Door Autoclave,** அல்ட்ரா சவுண்டு, எகோ ஸ்கேன் கருவிகளின் பயன்பாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தில் மேலும் ஆயிரத்து **500** செவிலியர்கள் பணியமர்த்தப்பட

உள்ளதாகவும், இதில் திருச்செங்கோடு மருத்துவமனைக்கு **20** பேர் ஒதுக்கீடு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாணிக்கம்பாளையம், மல்லசமுத்திரம், இறையமங்கலம், வட்டார ஆரம்ப சுகாதார மையங்கள் தரம் உயர்த்தப்படும் என்று தெரிவித்த அவர், இந்த மருத்துவமனைகளில் தொற்றா நோயை முழுமையாக கண்டறியும் வசதிகள் செய்துதரப்படும் என்றும், இயன்முறை சிகிச்சை உள்ளிட்டவை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களையும் படிப்படியாக மேம்படுத்துவற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மாநில அரசின் உத்தரவின்படி கைத்தறி வேட்டி — சேலை உற்பத்திப் பணிகள் தொடங்கியுள்ளதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெசவாளர்களுக்கு தேவையான நூல் கொள்முதல் செய்யப்பட்டு,

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வேட்டி உற்பத்திக்கு தேவையான ஒரு டன் நூல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு, தமிழக அரசு 300 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேட்டி - சேலை நெய்யும் நெசவாளர்களின் கூலியை உயர்த்தித்தருவது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

தனியார் பேருந்துகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவது தொடர்பான புகார் குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் திரு விஜய் பாலாஜி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திருமதி கமலி தெரிவித்துள்ளார்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாமினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

***(Sound Byte — கமலி - 33 Sec.)***

<<<<<<>>>>>

கிராமப்புற மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உற்றத்துணையாக இருக்கும் கால்நடைகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில் அரசு முகாம்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருவதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஜெகதீஸ்வரி, தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பாப்பாக்குடியில் நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில் பேசிய அவர், அரசின் சலுகைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா, கிராமப்புறங்களில்ஆடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் மகளிருக்கு 100 சதவீத மானியத்துடன் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இம்முகாமில் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் மூலம் தரமான கன்றுக்குட்டிகள் உருவாக்கப்படுவதாக அவர் கூறினார்.

நோய் தொற்றிலிருந்து கால்நடைகளை பாதுகாப்பது குறித்த தெளிவான விளக்கங்களும் இந்த முகாம்கள் மூலம் அளிக்கப்படுவதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைகளை சிறந்த முறையில் பராமரித்த விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>

சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் தவெக நிர்வாகிகளை கட்டுப்படுத்த அக்கட்சியின் தலைமை தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அக்கட்சி நிர்வாகிகள் கொலை, கொள்ளை குற்றங்கள், பாலியல் வன்கொடுமைகள், பணவசூல், வன்முறை தாக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் கூறியுள்ளார்.

சட்ட விரோத வலையமைப்பு அந்த கட்சிக்குள் உருவாகி வருவது வெளிப்படையாக தெரிவதாகவும், ஆனால் கட்சித் தலைமை அதனை கவனிக்க மறுப்பது கண்டனத்திற்குரியது என்றும் கூறியுள்ளார்.

ஒரு பிரச்சினை நடத்தபிறகு நிர்வாகிகளை கட்சியிலிருந்து நீக்குவது, கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பு என்றும் அவர் கூறியுள்ளார்.

நிர்வாகிகள் என்ற போர்வையில் உள்ள குற்றவாளிகளை கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மக்களின் பாதுகாப்பை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் சென்னை, செங்கல்ட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

**(Sound Byte — வி ஆர் துரை 50 Sec.)**

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சேலம் மாவட்டம் எடப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து புதிய கூடுதல் வழித்தட பேருந்து சேவையை மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் தொடங்கிவைத்தார்.

-------------------

மதுரை மாவட்டம் சின்ன சொக்கிக்குளத்தில் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பிட்டில் கட்டப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தை மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் திறந்துவைத்தார்.

------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆதியூரில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழாவை ஆட்சியர் திரு ரவிகுமார் தொடங்கிவைத்தார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பௌத்தர்கள், நாக்பூர் தீக்ஷாபூமியில் நடைபெறும் திருவிழாவில் பங்கேற்கும் வகையில், தமிழக அரசின் ஐந்தாயிரம் ரூபாய் மானியத்தை பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

------------------

விழுப்புரம் மாவட்டம் ஒரத்தூர் கிராமத்தில் 5 ஆயிரம் பனைவிதைகளை நடும் நிகழ்ச்சியை ஆட்சியர் திரு சேக் அப்துல் ரஹ்மான் தொடங்கிவைத்தார்.

------------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கலைக் கல்லூரியில் மாணவர்கள் ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடினர்.

---------------

சென்னை மாநகராட்சியின் ஆலந்தூர் மண்டலம் நந்தம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நாய்களுக்கான கருத்தடை மையம் மற்றும் மருத்துவமனை இன்று திறக்கப்பட்டது.

<<<<<<>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் **Amstelveen**-ல் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

------------------

தமிழ்நாடு பிரிமீயர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேலம் - திருப்பூர் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் சென்னையில் தற்போது நடைபெற்று வருகிறது.

மற்றொரு போட்டியில் நெல்லை அணி — மதுரை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>**